# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று தருமபுரி, சேலத்தில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஐந்தாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 13-ஆம் தேதி திருவள்ளூரில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று தருமபுரி, சேலத்தில் உரையாற்றுகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| 15.04.2026 (புதன்கிழமை) | | |
| மாலை 5 மணி | தருமபுரி (பொதுக்கூட்டம்) | பாலக்கோடு, பென்னாகரம், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் |
| மாலை 7 மணி | சேலம் - தேசிய நெடுஞ்சாலை, சீலநாயக்கன்பட்டி (பொதுக்கூட்டம்) | சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி |
| 16.04.2026 (வியாழக்கிழமை) | | |
| மாலை 5 மணி | நாமக்கல் - பொம்மு குட்டைமேடு (பொதுக்கூட்டம்) | நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு |
| மாலை 7 மணி | பெரம்பலூர் - ஒதியம் பிரிவு, குன்னம் (பொதுக்கூட்டம்) | பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் |

குறிப்பு: ❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

தலைமைக் கழகம்,
தி.மு.க.





கோவை ராஜவீதி, தேர்நிலைத் திடலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் உரையாற்றினார். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



போடி தொகுதியில், பழனிசெட்டிபட்டி 1வது வார்டு ஜவஹர் நகரில், வெற்றி வேட்பாளர் ஓ. பன்னீர்செல்வம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். இதே நகரில் பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்கும் வேட்பாளர் பெ.சக்திவேல் அவர்களும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் தேனி வடக்கு மாவட்டம் கழகச் செயலாளர், தங்கதமிழ்செல்வன் எம்.பி., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத், தேனி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ம.சக்கரவர்த்தி, பழனிசெட்டிபட்டி பேரூர் செயலாளர் பி.செல்வராஜ், பழனிசெட்டிபட்டி சேர்மன் வி.பி.ஏ.மிதுன் சக்கரவர்த்தி, முன்னாள் ஒன்றிய செயலாளர் அரண்மனை சுப்பு, தேனி வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.அருள்வாசகன் உள்ளிட்ட இளைஞர் அணியினரும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், பழனிசெட்டிபட்டி பேரூர் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.